போக்குவரத்து துறை

அனுப்புனர்
திரு.ஆர். ராதாகிருஷ்ணன்,
இணை போக்குவரத்து ஆணையர் (விதிகள்)
போக்குவரத்து ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை -600 005.

பெறுனர்
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்
சேலம் (மேற்கு).

ந.க.எண்.10311/ஜ4/2009 நாள்: 26.05.2010

பொருள்: மோட்டார் வாகனம் - போக்குவரத்து துறை – ஒரே மண்டலத்திற்குள் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்ட போக்குவரத்து வாகனங்களுக்கு மாற்று அனுமதிச் சீட்டு வழங்குவது குறித்து தெளிவுரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1) வட்டாரப் போக்குவரத்து அலுவலர், சேலம் (மேற்கு) அவர்கள்ன கடிதம் எண். 103467-சி4-2008, நாள்: 04.02.2009.
2) இணைப் போக்குவரத்து ஆணையர், சென்னை மற்றும் அனைத்து துணை போக்குவரத்து ஆணையர்களுக்கு இவ்வலுவலத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம் இதே எண். நாள்: 11.03.2009, 27.04.2009, 19.06.2009, 30.10.2009, 31.12.2009 மற்றும் 05.02.2010.

-----

பார்வை 1ல் கண்ட கடிதத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர், செலம் (மேற்கு) அவர்கள்,

1. ஒரே மாவட்டம் என்றாலும் வெவ்வேறு வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் செயலாளர்களால் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டு என்பதால் ஒரே மாவட்டத்திற்குள் மாற்று அனுமதிச் சீட்டு வழங்குவது சரியா?

ஆம். மாற்று அனுமதிச் சீட்டு வழங்குவது சரிதான்.

2. ஒரே வட்டாரப் போக்குவரத்து அதிகாரிய்ன கட்டுப்பாட்டிலுள்ள அனுமதிச் சீட்டு என்பதால் ஒரே மாவட்டத்திற்குள் மூன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலங்கள் இயங்கினாலும், சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே அனுமதிச் சீட்டில் உரிமம் மாற்றம் செய்த பின்னர், மாற்ற அனுமதிச் சீட்டு வழங்காமல், பகுதி அலுவலகங்களில் கேட்பு வரவு நிலுவைப் பதிவேடு பராமரிப்பதுபோல் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கேட்பு வரவு நிலுவைப் பதிவேடு பராமரிக்கலாமா?

3.1989 தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 197(அ)-விலும் மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்ற பொழுது, பிரிக்கக்படாத மாவட்டத்தில் இருந்த அனுமதிச் சீட்டுகள், மாவட்டம் பிரிக்கப்பட்ட பின் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் எல்லைக்குள் 1988 மோட்டார் வாகன சட்டம் பிரிவு 80(4)-ன் கீழ் அனுமதிச் சட்டுகள் மாற்றப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளதேயொழிய, மாவட்டத்திற்குள் அமைந்தால் அனுமதிச் சீட்டு மாற்றம் தேவையில்லை என குறிப்பிடவில்லை. எனவே. தற்சமயம் உள்ள நடைமுறைதான் சரியானதும், சட்டப்படியானதுமாக உள்ளது. எனவே இரண்டாவது வினாவிற்கு பதில் எழாது.

4. வட்டாரப் போக்குவரத்து அதிகாரி ஒருவராயிருந்தாலும், செயலாளர்கள் வெவ்வேறாக இருப்பதால் அவர்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் அவர்கள் அனுமதிச் சீட்டு வழங்குவதால் மாற்று அனுமதிச் சீட்டு வழங்கப்பட வேண்டும்.

5. எனவே, செயலாளர் மாற்று அனுமதிச் சீட்டு வழங்க கேட்பு வரவு நிலுவை பதிவேடு பராமரித்தல் அவசியம்.

6. மேற்கண்ட பொருள் சம்பந்தமாக இணை போக்குவரத்து ஆணையர் மற்றும் துணை போக்குவரத்து ஆணையாளர்களின் கருத்துரை கேட்கப்பட்டு அவர்களின் கருத்துரைகளின்படி, அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுகம், மேற்கண்ட நடைமுறையை பின்பற்றலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்/-ஆர்.ராதாகிருஷ்ணன்
இணை போக்குவரத்து ஆணையர்(விதிகள்)